Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 17 ஞாயிற்றுக்கிழமை (30-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 123

## கப்பல்-விமான பயணிகளுக்கு

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 940 பயணிகளுடன் கப்பல் சேவை நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 559க்கு உட்பட்டவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 523க்கு உட்பட்டவர்கள் நாளைக்குள் பயணம் செய்ய வேண்டும் என்றும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப ஐ.தே.கவும் ஏற்கா விட்டால் தொண்டா நடு றோட்டில......!

## நாகபட்டினம் கடலில் மிதந்த

# சடலத்தைக் கொழும்புக்குக் கொண்டு வர நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 30

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 19 ஆம் திகதி காணாமற் போன எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த விமானப்படை வீரர் என நம்பப்படும் ஒருவரின் சடலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட இருப்பதாக விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

தமிழ்நாடு நாகபட்டினம் கடலில் விமானப்படை சீருடையுடன் இந்தச் சடலம் மிதந்தது தெரிந்ததே.

கொழும்புக்கு சடலம் எடுத்து வரப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட இருப்பதாகவும் ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார். (இ-3)

## வடக்கில் கைதானோரில்

# ஒரு பெண் உட்பட 11 பேர் நாளை விடுதலை செய்யப்படுவர்

கொழும்பு, மார்ச் 30

வடபகுதியில் படையினரின் சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது, கடந்த செப்ரெம்பர் மாதம் சந்தேகத்தின் பேரில் கைதான 84 பேரில் ஒரு பெண்மணி உட்பட 11 பேர் நாளை அநுராதபுரம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று யாழ். ஈ.பி டி பி, அலுவலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலை செய்யப்படவுள்ள 11பேரின் விவரம் வருமாறு:

★ அருமைராஜா கஜேந்திரன் — கொட்டடி,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வீரவில முகாமில் உள்ளோரில் 62 பேர் ஏப்ரலில் விடுதலை

கொழும்பு, மார்ச் 30

அம்பாந்தோட்டை வீரவில இளைஞர் புனர்வாழ்வு முகாமிலிருந்து 62 வடபகுதித் தமிழ் இளைஞர்கள் ஏப்ரல் மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வுப் பயிற்சி பெற்ற 200 இளைஞர்களில் 62 இளைஞர்களே விடுதலை செய்யப்படவுள்ளனர் என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பொருள் விலை உயர்வு-தட்டுப்பாடு தடுப்பது குறித்து சங்கம் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருள்களின் விலை ஏற்றம், தட்டுப்பாடு ஆகியன குறித்து ஆராய்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக யாழ். வர்த்தகர் சங்கம் முடிவுகளை எடுத்துள்ளது.

ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடந்த சந்திப்பில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ பொருள்கள் விலையேற்றத்தைக் குறைக்க வசதியாக கப்பல்கள் துரிதமாக வடக்கே வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ கொழும்பு செல்லும் வர்த்தகர்கள் 10 அல்லது 15

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை மாற்றம்:

# இருவருக்குக் கல்தா; 3 புதிய முகங்கள்?

## விரைவில் நடைபெறலாம்

கொழும்பு, மார்ச் 30

அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் செய்யப்படும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த வெற்றியோடு அமைச்சரவை மாற்றம் குறித்து ஆளுங்கட்சி வட்டாரங்களில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உத்தேச அமைச்சரவை மாற்றத்தின் போது, இ. தொ. காங்கிரஸ் தலைவர் தொண்டமான், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் பிரிவின் தலைவி ஸ்ரீமானி லலித் அத்துலத்முதலி ஆகிய இரண்டு பேரையும் விலக்குவது குறித்துத் தீவிரமாக ஆராயப்படுகிறது.

இதேவேளை இப்போது பிரதி அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, லக்ஷ்மன்கிரியெல்ல, நிமல்சிறி ஜெயசிங்கா ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்று அறியவருகிறது.

திருமதி சிறிமானி அத்துலத்முதலியை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்ற கருத்து ஆளும் கட்சி வட்டாரத்தில் வலுத்து வருகிறது. குறிப்பாக கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்ன அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது சிறிமானி அத்துலத் முதலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி சபை தலைவர்களை தெரிவதில் அரசுக்குள் இழுபறி!

## செயற்குழுவிடம் பொறுப்பு ஒப்படைப்பு

கொழும்பு, மார்ச் 30

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் பிரதித்தலைவர்களைத் தெரிவு செய்வதற்கென கட்சி செயலாளர்கள் கடந்த வியாழக்கிழமை கூடி ஆராய்ந்த போது எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து மேற்படி தலைவர்கள் பிரதித்தலைவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் செயற்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று முதன்மை அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் தலைவராகவும் இன்னுமொரு கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் பிரதித் தலைவராகவும் தெரிவு செய்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாவியில் மிதந்த சடலங்கள்:

# 22 அதிரடிப்படையினருக்கு எதிரான வழக்கு வாபஸ்

கொழும்பு, மார்ச் 30

பொல்கொட, தியவன்ன, அளவ்வ வாவிகளில் மிதந்த சடலங்கள் தொடர்பாக 22 அதிரடிப்படை வீரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 13 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதிவான் முனிதாச நாணயக்காரவினால் நீதிமன்ற பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி வழக்கு எடுக்கப்பட்ட சமயம் வழக்குத் தொடுநர் தரப்பில் எவரும் சமுகமளிக்காததாலும்—சந்தேக நபர்கள் ஆஜரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனை கிரனேட் வீச்சுக்கு ஜிஹாத் அமைப்பே காரணமாம்

## சூதாட்டத்தை நிறுத்துமாறு எச்சரிக்கப்பட்டிருந்தது

வாழைச்சேனைக்கு அருகே உள்ள பிறைத்துறைச்சேனை முஸ்லிம் கிராமத்தில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற கிரனேட் தாக்குதலுக்கு 'ஜிஹாத்' அமைப்பைச்சேர்ந்தவர்களே காரணம் என தற்போது தெரிவிக்கப்படுகிறது.

[illegible] இடத்திலேயே இத் தாக்குதல் இடம்பெற்றது.

சூதாட்ட குகை போன்று அந்த இடம் செயற்பட்டதாகவும் —

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் சூதாட்டக் குகை உரிமையாளரும் ஒருவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஜிஹாத் குழுவினர் சூதாட்டத்துக்கு எதிராக ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதைப் பொருட்படுத்தாமல் இடம்பெற்ற சூதாட்டம் மீதே தாக்குதல் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் ஆரம்பம்

## சுமங்கலி ஜுவலர்ஸ்

**112 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

இது வரை காலம் இயங்காமல் இருந்த எமது நகை மாடம் மீண்டும் அதே இடத்தில் புதுப்பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அழகுக்கு அழகு செய்யும்

அசல் 22 கரட் தங்க நகைகளை

குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

**சுமங்கலி ஜுவலர்ஸ்**

★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது ★

(சி/385)

## BASIC LANGUAGE IN COMPUTER

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: **05-04-1997**

விவரங்களுக்கு: **NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

2nd Cross Street,
Jaffna.

(46066)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநரும் பேராலய முன்னாள் பங்குத் தந்தையுமான

அருட்தந்தை

**S.H. ஜெபநேசன் அடிகளார்**

காலமானதையறிந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ்

சென். அன்ரனீஸ் ஆலயம்,
பாஷையூர், யாழ்ப்பாணம், (46063)

## மரண அறிவித்தல்

**Rev. Fr. S. Hilary Jebanesan**

அருட்தந்தை

ச. கில்லறி ஜெபநேசன்

யாழ். மரியன்னை பேராலய முன்னாள் பங்குத் தந்தையும் தற்போது மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநராக வன்னியில் இருந்து பணியாற்றி வந்த அருட்தந்தை S.H. ஜெபநேசன் அடிகளார் அவர்கள் 28-3-97 பெரிய வெள்ளியன்று வன்னியில் காலமானார்.

அவரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரங்கள் பின்பு அறிவிக்கப்படும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோம்.

தகவல்:
வண. J. P. E. செல்வராசா அடிகளார்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (46060)

## சுப்பிரமணியம் வரதராசா

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் வரதராசா 28-03-1997 அன்று காலமானார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும், டாக்டர் யோகராணி (லண்டன்), யோகராஜா (நியூஸிலாந்து), யோகரஞ்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், டாக்டர் அல்பிரட் மரியநாயகம் (லண்டன்), உமா (நியூஸிலாந்து), சத்தியமூர்த்தி (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும், திரௌபதை (லண்டன்), கேசவன் (லண்டன்), ஐங்கரன் (நியூஸிலாந்து), அபிராமி (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29 - 03 - 1997 ஆம் திகதி தும்பளையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. சுப்பிரமணியம்
சட்டத்தரணி
(பெறாமகன்)

தும்பளை,
பருத்தித்துறை.

(46054)

## கலைவார இறுதிநிகழ்வு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் கலைவார இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் திங்கட்கிழமை முற்பகல் கைலாச பதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம விருந்தினராகப் பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொள்வார். போட்டிகளில் வெற்றி பெற்ற ஆங்கில, தமிழ் நாடகங்கள் உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-135)

## மீண்டும் மின் வெட்டு வரலாம்

கொழும்பு, மார்ச் 30

ஏப்ரல் மாத முடிவில் மின் வெட்டு அமுலாகக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை எச்சரித்துள்ளது.

நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவதால் அடுத்த 36 நாள்களில் மின் வெட்டு அமுலாகலாம் என எச்சரிக்கப் பட்டுள்ளது. (இ-150-3)

## கப்பலில் வந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

திருகோணமலையில் இருந்து நேற்று வந்த கப்பல் பயணிகளில் ஒருவர் இடை வழியில் மரணமானார்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த நாகமணி மார்க்கண்டு (வயது 55)என்பவரே மரணமானவர் ஆவார்.

காங்கேசன்துறையில் கப்பலை விட்டிறங்கி பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கையிலேயே பஸ்ஸுக்குள் இவர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ். வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது (இ-15)

## இருவர் பாம்பினால் கடியுண்டனர்

தென்மராட்சி, மார்ச் 30

ஒரே பாயில் படுத்திருந்த இரு பிள்ளைகள் விஷப் பாம்பினால் கடியுண்ட சம்பவம் நேற்று அதிகாலை மிருசுவில் விடத்தல்பளையில்இடம் பெற்றது.

பாம்பினால் கடியுண்ட இதே இடத்தைச் சேர்ந்த தவராசா பிரபாத் (வயது11) தவராசா சரத்பாபு (வயது $3\frac{1}{2}$) ஆகியோர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். (இ-117)

## பயணிகளுடன் வந்த மினிபஸ் விபத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பயணிகளுடன் வந்த மினி பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி ஓடி வாய்க்கால் போன்று வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

உப்புவல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற்றது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ்ஸே விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்தவர்களில் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது. (இ-15)

## தேர்தல் செய்தியால் வவுனியாவில் அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, மார்ச் 30

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் வடக்கிலும் விரைவில் நடைபெறலாம் என செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து வவுனியாவிலுள்ள அரசியல் கட்சிகள் சுறுசுறுப்படைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேவையான வேட்பாளர்களைத் தேடுவதில் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் வவுனியா, மன்னார்ப் பகுதிகளிலுள்ள பிரதேச சபைகள், நகர சபை, பட்டின சபைகள் என்பவற்றில் பலமுனைப் போட்டிகள் நிலவக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் கூறப் படுகின்றது.

(இ-5)

### வடக்கு-- கிழக்கில் பணிபுரியும்

## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் விரைவில் பதவி உயர்வு பெறுவர்

கொழும்பு மார்ச் 30

வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த சுமார் இருபது வருடங்களாக எவ்வித பதவி உயர்வுமின்றி கடமையாற்றி வருகின்றனர். சிறந்த சேவையாற்றிவரும் இவர்களுக்கு பதவி உயர்வுகள் மிகவிரைவில் வழங்கப் படவிருப்பதுடன் இவர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்கள் என்ற அந்தஸ்தையும் பெறுவார்கள்.

இவ்வாறு சம்மாந்துறை விழினையடி மாதர் தையற் பயிற்சி நிலையத்துக்கு அண்மையில் விஜயம் செய்த வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஜே. முரளீதரன் கூறினார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு மேற்கொண்டு வருகின்றது.

10 வருட சேவையை முடித்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சேவை மூப்பு அடிப்படையில் வகுப்பு ஒன்றுக்கான பதவி உயர்வு வழங்கப்பட உள்ளது. ஏனையோர் வகுப்பு இரண்டுக்குள் உள்ளீர்க்கப் படுவர். இவர்களுக்குப் புதிய சம்பளத் திட்டமும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

1988 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பதவி உயர்வுகள் அமுலுக்கு வருவதுடன் 1990 ஆம் ஆண்டிலிருந்து சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இந்தப் பதவி உயர்வுகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-4)

## பெண் லிகிதர் தேவை

பிரபல்யமான சோதிட நிலையத்திற்கு ஆங்கில அறிவும் ஆற்றலும் உள்ள பெண் லிகிதர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஞாயிறு, திங்கள் காலை **10.00** மணிக்கும் **11.00** மணிக்கும் இடையில் நேரில் சமுகம் தரவும்.

**ஸ்ரீ முருகன் சோதிட நிலையம்,**
**நல்லூர் வடக்கு வீதி.**

(46064)

## யாழ். வணிகர் கழகம்

### பதவி வெற்றிடம்

### அலுவலக உத்தியோகத்தர்

வேண்டிய தகைமைகள்:-

கல்வி 1. குறைந்தது க. பொ. த (சா/த) சித்தி பெற்றிருத்தல்.
2. தமிழ், ஆங்கிலம் திறமையாகப் பேச, எழுதத் தெரிதல் வேண்டும். (சிங்களம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)
3. தமிழ் அல்லது ஆங்கிலத் தட்டச்சு வேலை, கணக்கியல் அறிவு.

தொழில் அனுபவம்:- இத்துறை சார்ந்த ஐந்து வருட அனுபவம் மேலதிகமாக வணிகத்துறை சார்ந்த அனுபவம்.

வயது எல்லை:- **35** வயதுக்கு மேற்பட்டவராகவிருத்தல்.

ஏனைய தகைமை:- மக்களுடனான உறவு முறைக்கான அல்லது தொடர்புகளுக்கான சான்றுகள்.

வேதனம்:- தகைமைக்கு ஏற்ப பேசித் தீர்மானிக்கப் படும். விண்ணப்பங்களை சுய கோவை — சான்றிதழ் அத்தாட்சிப் பத்திரங்களுடன்

**நியமனக் குழு,**
**யாழ். வணிகர் கழகம்,**
**221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

என முகவரியிட்டு பதிவுத் தபாலில் **10 - 04 - 97** க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**சி. நமசிவாயம்**
**செயலாளர்**

(சி/394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோக்கியோ, நியூயோர்க்நகரங்களில்

# 70தொன் 'ஸரின்' விஷ வாயுவை வீசத் திட்டமிடப்பட்டிருந்தது

### ஜப்பான் மதகுழு உறுப்பினர் தகவல்

ரோக்கியோ, மார்ச் 30

நியூயோர்க், வாஷிங்டன், ரோக்கியோ ஆகிய நகரங்களில் மொத்தம் 70 மெற்றிக் தொன் எடையுடைய 'ஸரின்' விஷ வாயுவை வீசி மனித படுகொலைகளைச் செய்ய ஜப்பானிய மதக்குழு திட்டமிட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய அந்த அமைப்பின் உளவுப்பிரிவு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானிய தீவிர மதக்குழு ஒன்று கடந்த 1995 ஆம் ஆண்டு ரோக்கியோ உட்பட பல நகரங்களில் 'ஸரின்' என்னும் விஷவாயுத் தாக்குதல்களை நடத்தி பலரது உயிர்களைப் பலிவாங்கியமை தெரிந்ததே.

அந்த மதக்குழுவின் தலைவர் ஷோகோ அஸகாரா உட்பட பல உறுப்பினர்களை ஜப்பானியப் பொலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அந்த அமைப்பின் உளவுப் பிரிவின் உறுப்பினர் ஒருவரே நீதிமன்ற விசாரணையின் போது இந்த திடுக்கிடும் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

''இந்த உலகம் கொடுமைகள் நிறைந்தது. எனவே அதனைப் பூண்டோடு அழிப்பதே ஒரே வழியாகும்'' — என்பதே தங்கள் மதக்குழுவின் உறுதியான நம்பிக்கை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-10)

# அல்பேனியாவுக்கு பன்னாட்டு படைகள்

## ஐ. நா. பாதுகாப்புச் சபை அனுமதி

நியூயோர்க், மார்ச் 30

அல்பேனியாவுக்குபன்னாட்டுப் படையை அனுப்புவதற்கு ஐ. நா பாதுகாப்புச் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இத்தாலியின் தலைமையில் அல்பேனியா செல்லவுள்ள இந்தப் பன்னாட்டுப்படை அங்கு நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை மேற்பார்வையிடும்.

அல்பேனியா செல்லவுள்ள பன்னாட்டுப் படையில் இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் படைவீரர்கள் பெரும்பாலும் இடம்பெறுவர்.

அல்பேனியாவிற்கு அனுப்ப உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் தயாரானதும் இந்தப் படை அல்பேனியா செல்லும் என ஐ. நா. வுக்கான இத்தாலியத் தூதுவர் தெரிவித்தார்.

**அகதிகள் சென்ற படகு கவிழ்ந்தது**

அல்பேனிய அகதிகள் 100 பேரை ஏற்றிச்சென்ற படகு கவிழ்ந்ததில் குறைந்தது 47 பேர் கடலில் மூழ்கிவிட்டனர்.

இந்தச் சம்பவம் தெற்கு இத்தாலியத் துறைமுகமான பிறின்டிசிக்குச் சமீபமாக இடம்பெற்றது.

இதுவரை 34 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகத் துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசமான பருவ நிலையே படகு கவிழ்ந்ததற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிக்கு உதவியாக கப்பல்களையும், விமானங்களையும் இத்தாலி அனுப்பியுள்ளது.

அல்பேனியாவில் தற்போது இடம் பெற்றுவரும் உள்நாட்டுக் குழப்பம் காரணமாக பெருமளவிலான அல்பேனியர்கள் படகுகள் மூலம் இத்தாலிக்குச் சென்றவண்ணமுள்ளனர்.

(ஐ-10)

## 'ஹோலி பொப்' வால் நட்சத்திரம் தோன்றும் காலம்

# உயிர்துறந்துவிண்ணகம்செல்லவே கூட்டாகத் தற்கொலை புரிந்தனர்

### கலிபோர்னியா சம்பவம் குறித்து மேலும் தகவல்கள்

கலிபோர்னியா, மார்ச் 30

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் சன்டியாக்கோ என்ற இடத்தில் கூட்டாகத் தற்கொலை செய்த 39 பேரில் அந்தக் குழுவின் தலைவர் மார்ஷல் அட்டோவைற் என்பவரும் அடங்குவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு மனநோயாளியான இவர் திறமையாகப் பேசக்கூடியவர். தன்னை யேசுக் கிறிஸ்துவின் மறு அவதாரம் என்றும், தனது வழியைப் பின்பற்றுபவர்களை வானகத்திற்கு நேராகக் கூட்டிச் செல்வதாகவும் இவர் வாக்களித்திருக்கிறார்.

''ஹோலி பொப்'' வால் நட்சத்திரம் பூமியை நெருங்கி வரும் காலம்தான் வானகத்திற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய விண்கலம் வந்து சேர்வதற்கான அடையாளம்; அப்போது எம்து உயிர் உடம்பு என்னும் கூட்டில் இருந்து பிரிக்கப்பட்டு அந்த விண்கலத்தில் இடம்பிடித்துக்கொள்ள வேண்டும் என்று தன்னைப் பின்பற்றியவர்களை நம்பவைத்திருக்கிறார் மார்ஷல் அட்டோவைற்.

இதன்படியே விண்கலத்தில் இடம்பிடிப்பதற்காக இந்தக் கூட்டுத் தற்கொலை நடந்திருக்கிறது.

''இன்ரநெற்'' வழியாக ''வானகத்தின் வாயில்'' என்ற தலைப்பில் மார்ஷல் அட்டோவைற் தீவிரமாகப் பிரசாரங்களை நடத்தி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவருமே கல்வி அறிவு மிக்கவர்கள் என்றும் —

கொம்பியூட்டர் இயலில் அவர்கள் சூரப்புலிகள் என்றும் —

பண்பு ஒழுக்கத்தோடு நடந்து கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்கொலைச் சம்பவமானது சமூகவியல், உளவியல் ஆய்வாளர்களை ஆச்சரியத்திற்குட் படுத்தியுள்ளது.

66 வயதான தலைவன் மார்ஷல் அட்டோவைற் ஒரு முன்னாள் இசை ஆசிரியன் என்றும் தெரிய வந்துள்ளது.

(ஐ-10)

## ஸயரின் மற்றொரு நகரை கிளர்ச்சியாளர் கைப்பற்றினர்

ஸயர் நாட்டின் கால்வாசிப் பகுதியைக் கைப்பற்றி முன்னேறி வரும் கிளர்ச்சிப்படைகள் தமது சமீபத்திய தாக்குதல்களில் தென்கிழக்கு நகரமான கனன்ஜாவை கைப்பற்றி விட்டன.

கனிப்பொருள் வளம்நிறைந்த ஷாபா மாகாணத்தில் உள்ள ஸயரின் இரண்டாவது பெரிய நகரானலுபும்பாஸியில் இருந்து 220 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நகரம் அமைந்துள்ளது.

முன்னேறிவரும் கிளர்ச்சிப் படைகளுக்கு அரசாங்கப் படையினரிடம் இருந்து எதிர்ப்பு அதிகம் இருக்கவில்லை என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தங்கள் அடுத்த இலக்கை நோக்கி கிளர்ச்சிப் படையினர் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் வேளையில் லுபும்பாஸி நகருக்குச் செல்லும் பாதையில் உள்ள பல கிராமங்களில் மக்கள் கிளர்ச்சியாளர்களை வரவேற்கத் தயாராகி வருவதாக உள்ளூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாப்பரசர் சிலுவை சுமந்து சென்றார்

பெரிய வெள்ளியை முன்னிட்டு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று முன்தினம் சிலுவைசுமந்து ஊர்வலம் ஒன்றில் நடந்துசென்றார்.

76 வயதான பாப்பரசர் ஊர்வலத்தின் ஆரம்பத்தில் மட்டுமே சிலுவையைச் சுமந்தார். அதன் பின்னர் விசுவாசிகள் சிலர் சிலுவையைச் சுமந்து சென்றனர்.

''இயேசுக்கிறிஸ்துவின் துயரம் இன்றும் கூட வன்செயல் யுத்தம் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் அனுபவிக்கும் துயரத்தில் தொடர்கின்றது'' —என்று பாப்பரசர் உரையாற்றும் போது தெரிவித்தார்.

(ஐ)

# கடும் பரிசோதனையின் பின்னர் விமானங்கள் மீண்டும் சேவையில்

கொழும்பு, மார்ச் 30

விமானப்படையின் போர் விமானங்கள் போர்முனைக்கு சென்றுவர மீண்டும் ஆரம்பித்துள்ளன என்று விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

போர் முனைக்கு தேவையான தளபாடங்கள் மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லல், துருப்புக்களை அழைத்துச் செல்லல் போன்ற பணிகளில் அவை ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 19 ஆம் திகதி எம், ஐ. 24 ஹெலிக்கொப்டர் காணாமற் போனதைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்த இந்த வான் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்—

விமானப் படையினரிடம் உள்ள ஒவ்வொரு வானூர்தியும் தனித்தனியாகப் பரிசோதிக்கப்பட்ட பின்பே சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும்— விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-150)

# வசதி குறைந்த சிறிய விடுதிகளில் மாதக்கணக்காக தங்கும் தமிழர்கள்

### பலர் அம்மை நோயால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 30

கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழர்கள் மத்தியில் அம்மை நோய் பரவியுள்ளது.

போதிய வசதிகள் அற்ற சிறிய அறைகளில் ஒன்றாகப் பலர் சேர்ந்து தங்குவதால் அம்மை போன்ற நோய்களும் வேறும் பலவித வெப்பு நோய்களும் அவர்களைப் பீடித்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இருந்து தலைநகர் கொழும்புக்கு வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்தபடியே உள்ளது.

வெளிநாடு செல்வதற்காகவும், வெளிநாடுகளில் உள்ள தங்களது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்காகவும் வயது வேறுபாடின்றி கொழும்புக்கு வரும் தமிழர்களில் அநேகமானோர் வெள்ளவத்தை போன்ற இடங்களில் உள்ள சிறிய விடுதிகளில் தங்குகின்றனர்.

நீர் உட்பட பல அடிப்படை வசதிகள் இல்லாத சிறிய சிறிய அறைகளைக் கொண்ட விடுதிகளில் அவர்கள் மாதக் கணக்கில் தங்கி நிற்கின்றனர்.

யாழ். குடாநாட்டுக்கு அடுத்தபடியாக மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

(ஐ-90)

## காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச்30

யாழ். மரியன்னை பேராலயத்தின் முன்னாள் பங்குத்தந்தையும், மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநருமான [illegible] நேற்று முன் தினம் வெள்ளியன்று வன்னியில் காலமானார்.

(ஐ)

## பேசாலைத் தாக்குதலை அடுத்து மன்னார் நகரில் பதற்றம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 30

பேசாலையில் அண்மையில் இராணுவம் மற்றும் பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களைத் தொடர்ந்து மன்னார் நகரில் பதற்றம் நிலவி வருகிறது.

இராணுவத்தினதும் பொலீஸாரினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் அதேவேளை புலிகளும் மன்னார்த்தீவுக்குள் அடிக்கடி ஊடுருவி நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்காலை, விடத்தல்தீவு, அடம்பன் போன்ற பெருநிலப்பரப்பு பிரதேசத்திலிருந்து அச்சத்துடனேயே மக்கள் மன்னார்த்தீவுக்கு வந்து செல்கின்றனர்.

மன்னார்த்தீவில் மீண்டும் எந்நேரமும் மோதல் நிகழலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இதேவேளை மன்னார்த்தீவில் உள்ள பேசாலையில் கடைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. கடைகளில் இருந்த பொருள்களை வர்த்தகர்கள் தங்களது வீடுகளுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

[இ-4]

## கொழும்பு தனியார் தபாலகங்களில் தமிழரது கடிதங்களைஏற்க மறுப்பு

கொழும்பு, மார்ச் 30

கொழும்பில் உள்ள தனியார் முகவர் தபால் நிலையங்களுக்கு தங்கள் தேவைகளின் நிமித்தம் செல்லும் தமிழர்கள் அங்குள்ள அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவதாக தலைநகர் வாசியான தமிழர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்படுவதற்காகக் கொண்டு செல்லும் கடிதங்களின் முகவரியை அவதானித்துவிட்டு அவற்றை அரச தபாலகங்கள் மூலம் அனுப்புமாறு அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

தமிழர்களால் நிர்வகிக்கப்படும் சில முகவர் தபால் நிலையங்களில் மட்டுமே தமிழர்களது கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

(ஐ-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் நிர்வாகம் சம்பந்தமாக பரிபாலன சபையாருக்கும், பூசகர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கு சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபரால் 28 - 05 - 96 அன்று ஓர் இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி ஆலய நிர்வாகத்தை பரிபாலன சபையும், பூசகர்கள் பூசையை மட்டும் நடத்த வேண்டும் என்பதாகும்.

இத்தகைய பின்னணியில் பூசகர்களிடம் வழங்கப்படும் பணத்துக்கோ, பொருளுக்கோ பரிபாலன சபை பொறுப்பாளியாகமாட்டாது என்பதனை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். அதேவேளையில் இவ்வாலயத்தில் வேறு எந்தச் சபையும் பரிபாலன சபையால் அமைக்கப்படவும் இல்லை; திருப்பணிக்கு நிதி சேகரிக்க பரிபாலனசபை எவருக்கும் அதிகாரம் அளிக்கப்படவுமில்லை என்பதனை அடியார்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

- பரிபாலன சபை

(46056)

யாழ்ப்பாணம்

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## விசேட பொதுச்சபைக்கூட்ட அறிவித்தல்

யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 05-04-97 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு. ச. த. கணநாதன் அவர்கள் தலைமையில் சங்கப் பணிமனையிலுள்ள கேட்போர் கூடத்தில் இடம் பெறும். சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகந் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


செயலாளர்,
யாழ். ப. நோ. கூ. சங்கம்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
27-03-97

(சி/332)

# முருகேசு சுவாமிகளின் பதினாறாவது (16-ம்) நாள் விழா

31 - 03 - 1997



உயர்திரு. வே. முருகேசு சுவாமிகளின்

16 ஆம் நாள் ஷ் விழா சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில்

நல்லை ஆதீன முதல்வர் தலைமையில்

மலர் வெளியீட்டுடனும், பல பெரியோர்களின் சிற்றுரைகளுடனும் இடம்பெறும். இறுதியில் மாகேசுர பூசையும் நடைபெறும் என்பதையும் அறியத் தருகிறோம். அன்பர்கள், அடியார்கள் கலந்து அத்தினத்தைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆ. அருணாசலம்

செல்வச்சந்நிதி,
தொண்டமனாறு.

(சி-381)

## பாராட்டுவிழா

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றி இளைப்பாறியவர்களுக்கான சேவை நலம் பாராட்டுவிழா அதிபர்சங்கத் தலைவர் திரு. வி. மாணிக்கம் தலைமையில் திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நடைபெறும். (ஐ)

## சமய சந்திகளில்

உயிர்த்த ஞாயிறு தினமான இன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இன்று காலைத் திருப்பலி 6. 30 மணிக்கும் பின்னர் 8. 30 மணிக்கும், மாலைத் திருப்பலி 4. 30 மணிக்கும் நடைபெறும்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு முதலாம் திருப்பலி இடம்பெறும். பின்னர் இரண்டாம் திருப்பலி காலை 8 30 மணிக்கு நடைபெறும். (ஐ- 51)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ ஐயனார் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலைநடைபெறவுள்ளது. (ஐ-20)

★ ★ ★

யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேச தின மணவாளக் கோலத் திருவிழா நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனையைத் தொடர்ந்து 2.30 மணிக்கு பஞ்சமுக விநாயகர் வீதிஉலா வருவார். (ஐ)

★ ★ ★

மூளாய் ஸ்ரீ முத்துக் குமார சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 7ஆம் திகதி வரை — 15 தினங்களுக்கு — மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெற செல்ல யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி பயணத்துக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி பயணம் செய்ய ஏற்பாடாகியுள்ளது. அதற்கு வசதியாக அவர்களை முதல் நாள் 7 ஆம் திகதியே ஆஸ்பத்திரியில் அல்லது அண்மையில் உள்ள இடங்களில் வந்து தங்கி நின்று பயணத்தை மேற்கொள்ளுமாறு ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)


**WALK IN INTERVIEW**

★ பாதுகாப்பு உத்தியோகத்தர் ★ சாரதி ★ வீடு பராமரிப்பவர் (ஆண்) தேவை. 3-4-97, 4-4-97 (வியாழன், வெள்ளி) திகதிகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12—00 வரை, பிற்பகல் 2-00 முதல் 4-00 வரை (இலங்கை நேரம்) நேரில் வரவும்.

**M.S.F. அலுவலகம்**
**C.L.S. புத்தக நிலைய லேன்,**
(A cross from Hospital)
யாழ்ப்பாணம்.


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 23 |
| — | — |
| 11 | 03 |
| — | — |
| 1927 | 1995 |

## அமரர் திரு. க. சின்னத்துரை

(முன்னாள் பாதுகாவலர், கீரிமலைக்கேணி)

சஷ்டி திதி:- 30 - 03 — 1997

ஆண்டிரண்டு சென்றிடினும் — எம்
நெஞ்சை விட்டகலாதையா நும்நினைவு.

மனைவி, மக்கள்,
சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி.

(45724)

# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 30 | 28 |
| — | — |
| 04 | 02 |
| — | — |
| 1930 | 1997 |

## அமரர் டேவிற் மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)

ஆருயிர்த் தந்தையே, அன்பின் பிறப்பிடமே, பாசத்தின் ஊற்றே, பண்பின் திருவுருவே, மீளாத் துயில் கொண்டீர், மீண்டுமெப்போ காண்பதப்பா திங்கள் பல சென்றாலும், தந்தையே உமை மறவோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்.

814, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(46049)

முதலாம் ஆண்டு

# நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 05 | 09 |
| — | — |
| 12 | 04 |
| — | — |
| 1971 | 1996 |

## கதிர்காமத்தம்பி கேதீஸ்வரன்

(கண்ணன்)

திதி: 30 - 03 - 1997

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்ந்து
எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத கண்ணனே!
இள வயதினிலே இறைவனடி சேர்ந்து விட்ட
எம் அரிய செல்வமே!
உன்னை நினைந்து உருகும் எங்கள்
இதயக் கோயிலில் என்றும் நிலைத்திருப்பாய்!

உனது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா, சகோதரர்கள்.

1 ஆம் கட்டையடி,
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

(46055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. வி. பியின் 101 உறுப்பினர்களும் விரைவில் இராஜினாமாச் செய்வர்

## அவர்களின் இடத்துக்கு பொருத்தமானோர் நியமனம்

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது பல்வேறு பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபைகளுக்காக ஜே.வி.பி. கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 101 உறுப்னபிர்களும்ராஜினாமா செய்யவுள்ளனர் என்று ஜே வி. பியின் பிரதான செயலர் ஷெல்வின்சில்வா தெரிவித்தார்.

ஜே. வி. பியிலுள்ள மிகவும் பொருத்தமான, தகுதியானவர்களுக்கு இடமளிக்கும் வகையிலேயே இந்த 101பேரும் ராஜினாமா செய்யவுள்ளனர் என அவர் கூறினார்.

இந்த உறுப்பினர்கள் ராஜினாமா செய்தபின்னர் அவர்களது இடத்துக்கு நியமிக்க வேண்டியவர்களை ஜே வி. பியின் மத்திய செயற்குழு தெரிவு செய்யும் என ஷெல்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

# தோல் நோயினால் பாதிக்கப்பட்டு கட்டாக்காலியாக திரியும் நாய்கள்

அச்சுவேலி, மார்ச் 30

அச்சுவேலிப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

தோல் நோய்க்கு உள்ளான கட்டாக்காலி நாய்கள் பெருமளவில் வீதிகள் வீடுகள் தோறும் அலைந்து திரிகின்றன.

வரட்சி கூடிய இக்கால ட. பகுதியில் விசர் நாய்க்கடிக்கு உள்ளாக வேண்டிய அபாயகரமான நிலை ஏற்பட்டுவருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. (ஐ-11)

# கிறிஸ்து உயிர்த்தார்- அல்லேலூயா

இன்று கிறிஸ்து உயிர்த்த நாள. கிறிஸ்தவ மக்கள் எல்லோரும் உலகம் முழுவதிலும் இந்த உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடுகிறார்கள்.

தவக்காலம் 40 நாள்களுக்கு முன் திருநீற்றுப்புதனுடன் ஆரம்பமாகியது. இயேசுவின் உயிர்ப்புடன் இன்று நிறைவடைகிறது. பாஸ்கா காலம் இன்று முதல் ஆரம்பமாகிறது.

இயேசுவின் உயிர்ப்பு ஒரு சரித்திர நிகழ்வு. இந்த உயிர்ப்பிலே தான் கிறிஸ்தவம் கட்டி எழுப்பப்பட்டது.

புனித அருளப்பர் (20:1-9) நற்செய்தி இயேசுவின் உயிர்ப்பை ஒரு வரலாற்று நிகழ்வாக சான்றுகளுடன் நிரூபிக்கிறது. வாரத்தின் முதல் நாள். இருள் நீங்கவில்லை; விடியற்காலை. மதலேன் மரியாள் வழியாக இயேசுவைக் கல்லறையில் காணவில்லை என்ற செய்தி பரவுகின்றது. பரபரப்பு மிகுகிறது. அங்கே ஓர் ஓட்டப் போட்டி, இராயப்பரும் அருளப்பரும் கல்லறை நோக்கி ஓடுகிறார்கள். ஒருவர் வேகமாக ஓடுகிறார். மற்றவர் பின் தொடர்கிறார். அங்கு வெற்றுக் கல்லறை.

''கண்டார் நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ள வில்லை'' (20:9).

இயேசு ஒருதெய்வமனிதன். அவருக்கு ஒரு பணி இருந்தது. அதை நிறைவேற்றவே உலகிற்குவந்தார். தனது 33வருட வாழ்வில் தம்பணிபற்றியும் பணிநிறைவுபற்றியும் பலமுறை போதித்தார். போதித்ததை தம் செயல்களில் சாதித்தும் காட்டினார்.

புதுமைகளையும், போதனைகளையும் அருங்குறிகளையும் பார்த்து அதிசயித்த மக்களும் சீடர்களும் தம்பாடுகளையும் மரணத்தையும் பற்றிச்சொன்ன போது ஆடிப் போனார்கள். தாம் போதித்த —முன் அறிவித்த—பாடுகளையும் மரணத்தையும் தாம் அனுபவித்துச் சாதித்த போது அதிர்ந்து விட்டார்கள்.

**இன்று உயிர்தத ஞாயிறு**

உயிர்ப்புப்பற்றிய போதனை அவர்களுக்கு ஒரு புரியாத புதிராக இருந்தது. இயேசு உயிர்த்த போதுஅவர்களுக்குஎல்லாமே புதிதானது. புதிய உலகில், புதியஉணர்வில், புதியவிசுவாசத்தில் சாட்சியவாழ்வு வாழத் தொடங்கினார்கள்.

இயேசு இறந்து உயிர்த்தெழவேண்டும் என்ற மறைநூல் வாக்குக் கூட அதுவரை அவர்களுக்குப் புரியா திருந்தது. அப்போது புதிய அர்த்தம் தந்தது.

இயேசு தம் பணியின் உச்சக்கட்டமாக பாடுகள்— மரணம்— உயிர்ப்பு என்னும் அனுபவங்களுக்கு ஆளாக்கப்பட்டார். பாடுகளும் மரணமும் உயிர்ப்பில் இருந்து பிரிக்கப்பட முடியாதவை, பாடுகள் இன்றி மரணமும் மரணம் இன்றி உயிர்ப்பும் இருக்க முடியாது. மூன்றும் சேர்ந்தேஒரு நிகழ்ச்சியாகிறது.

யூத மரபிலே எந்த உண்மையும் இருவர் சாட்சியத்தால் நிரூபிக்கப்படும் போது தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இராயப்பரும் அருளப்பரும் வெற்றுக் கல்லறையை சான்றாக வைத்து உயிர்ப்பிற்கு சான்றுபகர்கிறார்கள்.

''இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்த பின் அவரோடு உண்டும் குடித்தும் வந்த நாங்களே சாட்சிகள்'' (அப். பணி 10:42) என்று இராயப்பரே சாட்சியம் பகர்கிறார்.

இந்த சாட்சிய உண்மை ஒரு பாடத்தை நமக்கு ஆழமாகச் சொல்லித்தர வேண்டும். இயேசு பாடுகள், மரணம் வழியாக உயிர்த்தார். உயிர்ப்பு இல்லாவிடின் எங்கள் விசுவாசமும் போதனையும் பயனற்றவை. கிறிஸ்து உயிர்த்தார்.

அல்லேலூயா என்று சொல்லும்போது நாமும் இருளில் இருந்து ஒளிக்கு, சாவில் இருந்து வாழ்வுக்கு, பொய்மையிலிருந்து மெய்மைக்கும், சமாதானத்திற்கும், விடுதலைக்கும் பாதுகாப்புக்கும் உயிர்க்கச் செபிப்போமாக.

அருள்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

# பண்பாட்டின் பெருஞ்செல்வம் பேரறிஞர் எப். எக்ஸ். சி. நடராசா

எங்கள் புலமை மரபின் சின்னமாக விளங்கிய பேரறிஞர் எப். எக்ஸ். சி. நடராசா அவர்களின் இழப்பு, ஈடுசெய்ய முடியாதது. மரபுவழி அறிவை நவீன ஆய்வு முறைகளுடன் இயல்பாய் இணைத்து அவர் தந்த ஆக்கங்கள் பல. தமிழ் இலக்கணம், இலக்கியம், சமூக வரலாறு, பண்பாடு என அவர் தடம் பதித்த அறிவுப் பரப்பு விரிவானது. கலைச்சொல் ஆக்கம், மொழிபெயர்ப்பு கலை தொடர்பான அவரது படைப்புக்கள், தமிழியல் வளர்ச்சியில் பெரிதும் துணையாவன.

எமது சமூக வரலாற்றை, பண்பாட்டுக் கோலங்களை தேடி ஆராயும் ஒருவருக்கு அவர் விட்டுச் சென்ற அரிய ஆய்வுச் செல்வங்கள் ஆதார மூலங்களாகும். குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தின் வாழ்வும் வளமும் பற்றிய அவரது ஆக்கங்கள் மிகச் சிறப்பானவை. அவர் பதிப்பித்த தொன்மையான நூல்கள் பலவும், இன்றைய மானுடவியல் ஆய்வாளர்கள் பலரினதும் சிறப்பான கவனத்தைப் பெறுவன. நாட்டார் பாடல்களிலிருந்து நவீன மொழிபெயர்ப்புக் கலை வரை விரிந்த அவர் அறிவார்வம் எமக்கெல்லாம் ஆதர்சனமானது.

அறிவுத்துணிவுடன் தமது ஆய்வு முடிவுகளை மிகவும் வீச்சாக முன்வைத்த அவரின்

**நீத்தார் நயப்புரை**

திறமும் அனைவராலும் போற்றப்படுவது. பட்டம் பதவிகளுக்காக தமது நியமங்களை, கருத்தியல்களையே அடிக்கடி மாற்றிக் கொள்ளும் மனிதர்களிடை எப். எக்ஸ். சி. அவர்கள் மிக உயர்ந்த அறிஞராக நிமிர்ந்து தரிசனம் தருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட எப். எக்ஸ். சி. நடராசா அவர்களின் கல்வி-ஆய்வுப் பணிகள் மட்டக்களப்பு புலத்திலேயே நிகழ்ந்தன. சுவாமி விபுலாநந்தர் உட்பட பல பேரறிஞர்களின் வழிகாட்டலின் கீழ் அவரது தமிழியல் ஆய்வுப்பணிகள் நிலை பெற்றன. மகாவித்துவான் சி. கணேசையாவுக்கு பின் அந்தப் பட்டத்தைப் பெற்ற பெருமைக்குரியவர். கிழக்குப் பல்கலைக் கழகம் அண்மையில் இலக்கிய கலாநிதி பட்டத்தினை அவருக்கு வழங்கித் தன்னைக் கௌரவித்துக் கொண்டது.

எப். எக்ஸி. சி. நடராசா அவர்களின் ஆக்கங்கள் எமது புதிய தலைமுறையினருக்கு சிறப்பாக அறிமுகப் படுத்தப்பட வேண்டும். அவரது புலமை மரபு அதன்வழி நிலைபெற வேண்டும்.

[illegible]
[illegible] துறை சிரேஷ்ட
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

ஐ.நா. தூதரக உதவியுடன்

# புலோலி மேற்கு விவசாயிகள் சிரமதானம் மூலம் வடிகாலமைப்பு

பருத்தித்துறை, மார்ச் 30

புலோலி மேற்கு விவசாயிகளின் நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்பட்டு வருகிறது. புலோலி மேற்கு விவசாயிகளின் தோட்ட நிலப் பரப்புக்கு அண்மித்த வடிகால் அமைப்பு சீரற்று இருந்தமையால் கடந்த பல வருடங்களாக வெள்ளம் உட்புகுவதால் பயிரழிவு ஏற்பட்டு வந்தது. அண்மையில் அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தினரும் புலோலி மேற்கு விவசாயிகளும் கலந்துரையாடியதைத் தொடர்ந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கான வடிகால் அமைப்பினை ஏற்படுத்துவதற்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த அபிவிருத்தி வேலைகளை புலோலி மேற்கு விவசாயிகள் சிரமதான மூலம் செய்து வருகிறார்கள். வடிகால் அமைப்பிற்கான சிமெந்து, கல், மண் என்பனவே இந்நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

புலோலி மேற்கு, தெணி அம்மன் பகுதி விவசாயிகள் இவ்வேலைத் திட்டத்தில் ஆர்வத்துடன் பங்குபற்றுவதை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரக பிரமுகர்கள் நேரில் சென்று பார்வையிட்டு திருப்தி தெரிவித்துள்ளனர். இதனால் இப்பகுதியிலுள்ள சுமார் 200 ஏக்கர் நிலத்தில் மாரிகாலத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் என புலோலி மேற்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு.க. சண்முகநாதன் தெரிவித்தார். (ஐ-118)

# ஆலயங்களில் பூசை ஆரம்பம்

கடந்த 6 வருட இடைவெளியின் பின் தீவகத்திலுள்ள நாரந்தனை - சரவணை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் மற்றும் சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் ஆகியவற்றில் நித்திய நைமித்தியபூசைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதற்கு முன்னேற்பாடாக இவ்விரு ஆலயங்களிலும் அண்மையில் சம்புரோச்சன கும்பாபிஷேகம் நடைபெற்றது. (ஐ-4)

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியம்

## நன்றி செலுத்தும் வழிபாடு

**தந்தை S. J. V. செல்வநாயகம்**

அவர்களின் வாழ்வின்

**99 ஆம் ஆண்டு நிறைவு**
**ஞாபகார்த்த ஆராதனை**

**இடம்: யாழ். பரி. யோவான் ஆலயம் சுண்டுக்குளி**
**காலம்: 1997-03-31 மாலை 3-30 மணி(S.L.T)**

பாராட்டுரை:
யாழ். தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர்
அதி வண. கலாநிதி D. J. அம்பலவாணர்

இறை செய்தி:
யாழ். மறை மாவட்ட றோமன் கத்தோலிக்க ஆயர்
அதி வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம்

யாவரும் இந்த ஆராதனைக்கு அன்பாய் அழைக்கப்படுகிறீர்கள்.

வண. S. மில்ரன்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றிய செயலாளர்.
(46061)

## 4 ஆம் ஆண்டு நினைவின் நீங்காத நினைவலைகள்

மலர்வு: 16 — 01 — 1919



உதிர்வு: 13 — 04 — 1993

**திதி: 30 - 03 - 1997**

அமரர்

## சோமசுந்தரம் வன்னியசிங்கம்

(முன்னைநாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறவில்லை நம் துயரம்; மறக்காது என்றும் உங்கள் இனிய முகமும் கனிந்த பேச்சும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையக் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

மனைவி, பெறாமக்கள், குடும்பத்தினர்.

''வைரவர் கடாட்சம்'',
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(சி/393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Broiler(புறொயிலர்)இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவு கொடுக்கப்படும். இல.101, இலுப்பையடிச்சந்தி, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (46019)

National T.V. 20'', ஜமகா ஜெனரேற்றர் (650w), 2Kw டைனமோ 1500 (R.P.M.) Stabiliser (1KVA), பொமனேரியன் நாய்க்குட்டி என்பன விற்பனைக்குண்டு. ம. சுரேந்திரஜித், 183, சென். ஜேம்ஸ் லேன், யாழ்ப்பாணம். (தற்போதய நீதிமன்ற முன் ஒழுங்கை) (46025)

பல வகையான செவ்வரத்தம் கன்றுகள் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46027)

பழைய தீராந்தி 12, 10 அங்குலம் (பாலைமரம்), பனை மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு. திரு. மனோகரன், 506 (202), கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (46028)

பேஜோ 504, நல்ல நிலையில், டாக்டரின் தனிப் பாவனையில் (One Owner) உள்ளது; பெற்றோலில் இயங்குவது விற்பனைக்குண்டு, தொடர்பு: இல. 118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (46044)

### மணப்பெண் தேவை

30 வயது மிருகசீரிடம் 1, 7 இல் செவ்வாய் (மொத்த பாவம் 29) கொம்பியூட்டர் எஞ்ஜினியர் (இந்தியாவில்), மணமகனுக்கு படித்த அழகிய மணப்பெண் தேவை. ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி. (46051)

ஜேர்மனியில் தொழில் புரியும் 36 வயது, அஸ்வினி நட்சத்திர (மொத்தபாவம் 12) ஆணுக்கு 31 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. க. திருஞானசம்பந்த சர்மா, ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி. (46050)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை (ஞாயிறு 12 மணி வரை) இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9441)

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Broiler Sales Centre Palaly Road Thirunelvely. (9440)

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்குண்டு. 1 கிலோ விலை ரூபா 150/- 317 B நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (46045)

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்குண்டு. விலை 1Kg. 150/- சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (46029)

இறைச்சிக் கோழி புறொயிலர்] விற்பனைக்குண்டு. தொடர்பு: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46026)

இறைச்சிக் கோழி [புறொயிலர்], மொத்தமாகவும், சில்லறையாகவும், விற்பனைக்குண்டு. 1 Kg 150/-. 86, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46030)

இறைச்சிக் கோழி (புறொயிலர்) நியாய விலையில் விற்கப்படும். 54/2 சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணம். குறிப்பு: ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். (46048)

1½ மாதம் நிரம்பிய பொமன் இன சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சு விற்பனைக்குண்டு. முகவரி; R. S. K. கோழிப்பண்ணை முருகபதி, உடுவில், சுன்னாகம் (மான்ஸ் பாடசாலை அருகில்). (46052)

### தவறி விட்டது

தி. ராஜ்குமார் (பொறியியல் பீடம்), பேராதனை என்பவரது பச்சை நிற பயணப் பையும், சிறுபிள்ளைக்கான துவிச்சக்கர வண்டி ஒன்றும் 25-3-97 அன்று K K.S. இல் இருந்து பருத்தித்துறை செல்லும் போது தவறி விட்டன. தகவல் அறிந்தவர் A. முரளி ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (46033)

## வீட்டுத் தளபாடங்கள் தேவை

- கட்டில்கள்-டெஸ்க்ஸ்
- புத்தக அலுமாரிகள்
- கபேர்ட்ஸ்-மேசைகள்
- கதிரைகள்
- மின் விசிறிகள் (Portable)

திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 9.00-பிற்பகல் 4.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

**JENNIFER**
**M.S.F. அலுவலகம்**
**C.L.S புத்தக நிலைய லேன்,**
(Across from hospital)
யாழ்ப்பாணம்.
(46046)

## அடையாள அட்டை கவரிடுதல்

சகலவிதமான அடையாள அட்டைகளையும் குறைந்த கட்டணத்தில் கவரிட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும்:

**கிளீன்கட்**
(ராணி சினிமா அருகாமையில்)
**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**
(9445)

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
**MARUTHANARMADAM, CHUNNAKAM.**

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

## AGRICULTURE JUNIOR CERTIFICATE COURSE

**குறுகியகால விவசாய பயிற்சி நெறி:**

4 மாத காலம் பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், விவசாய மூலதத்துவம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய இலவச சாதனா போதனா பயிற்சி நெறிக்கு க. பொ. த. (சாதாரணம்) கல்வி கற்ற 16-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **09 - 04 - 97** காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேரடியாக சமுகமளிக்கவும்.

**குறிப்பு:**

இப் பயிற்சி நெறிக்கு உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**அதிபர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்**
மருதனார்மடம், சுன்னாகம். (46014)

## அறிவித்தல்

**பண்டத்தரிப்பு**
**பரிஷ் பல நோ. கூ. சங்கம்**
(வரையுள்ளது)

## 16ஆவது வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

**காலம்:** 1997-04-06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** முற்பகல் 10-00 மணி (புதிய நேரம்)
**இடம்:** பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலய கூட்ட மண்டபம்
**தலைமை:** திரு. ச. செல்வரத்தினம் (சங்கத் தலைவர்)

### நிகழ்ச்சி நிரல்

01. மௌன இறைவணக்கம்
02. கூட்ட நிகழ்ச்சி நிரல் வாசித்தல்
03. தலைமை உரை
04. சென்ற வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
05. 1997/98 நிதி வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் அங்கீகாரம் பெறல்
06. 1997/98 நிதி வருடத்திற்கான மொத்தக் கடன் எல்லை அங்கீகாரம் பெறல்
07. 1993/94 நிதி வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையையும், கணக்காய்வாளரின் அறிக்கையையும் சமர்ப்பித்தல்
08. 1993/94 நிதி வருடத்தில் எஞ்சியிருக்கும் சுத்த இலாபத்தை ஒதுக்கீடு செய்தல்
09. 1993/94 நிதி வருடத்தில் 0 25% சேதாரக் கழிவு வழங்கியமைக்கு அங்கீகாரம் பெறல்
10. (அ) இராணுவ நடவடிக்கையால் சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு விவரம் சமர்ப்பித்தல், (ஆ) இராணுவ நடவடிக்கையின் போது வியாபார நிலையங்களில் ஏற்பட்ட களவு, பொருள்குறைவு, பதிவழித்தலுக்கு அங்கீகாரம் கோரல்
11. சங்கத்திற்குபுதிய "மெசிவேக்ஷன் டிராக்டர் 240" கொள்வனவுக்கு முன் அங்கீகாரம் பெறல்
12. சங்க இசுசூ 24/9792 இலக்க லொறிக்கு உடற் கோப்பு அமைத்தல், உத்தேச செலவு மதிப்பீட்டுக்கு முன் அங்கீகாரம் பெறல்
13. சங்கத் தலைமைக் காரியாலய புனரமைப்பு உத்தேச செலவு மதிப்பீட்டுக்கு முன் அங்கீகாரம் பெறல்
14. வாகன திருத்த செலவீனங்களுக்கு அங்கீகாரம் பெறல்
15. மதிய உணவு
16. பிரேரணை சமர்ப்பித்தல்
17. சிறப்புரைகள்
18. நன்றியுரை

பொதுச்சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு தனித்தனி நிகழ்ச்சி நிரல் அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத்தில் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| **ச. செல்வரத்தினம்** | **ஆ. நாகராசா** |
| தலைவர் | செயலாளர் |

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(சி-386)

# BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

ஜேர்மனியின் **BASF** நிறுவனத்தின் விவசாய இரசாயனங்களான

குமுலுஸ் டி எவ்
பேர்Fவெக்தியோன்
தயோடான்
பிFன்பொஸ்
பொலிராம்
மற்றும் புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த
டெஸிஸ்

தற்பொழுது கொழும்பிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்டு குடாநாட்டின் சகல விவசாய இரசாயன விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன.

**விநியோகஸ்தர்:**

## FARMERS STORES
(கமக்காரர் மாளிகை)
சுன்னாகம் கிளை: திருநெல்வேலி

**BASF - FINLAY (PVT.) LTD.**
**186, VAUXHALL STREET, COLOMBO - 2**
பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள். (சி-258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கோணல் நிமிருமா?

யாழ்ப்பாண நகரை அண்டியுள்ள பெரிய சந்தை திருநெல்வேலியில் உண்டு. அங்கு கிடைக்காத உள்ளூர் விளைபொருள் எதுவுமில்லை. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அனேகமான காய்கறிகள் கிலோ 10 ரூபாவுக்குக் குறைவாகவே விற்பனையாகின்றன.

ஒரு காலத்தில் மலைநாட்டு மரக்கறிகள் என்று பெயர் குத்தப்பட்டிருந்த லீக்ஸ், கரட், பீட்ருட் உருளைக்கிழங்கு, கோவா போன்றவை இப்போது யாழ்ப்பாணத்தின் பிரபல விளை பொருள்களாகி விட்டன. அவையும் மிகக் குறைந்த விலைகளிலேயே விற்பனையாகின்றன.

அதனால் விவசாயியின் கடும் உழைப்புக்கு ஏற்ற வருமானம் அவனுக்கு இல்லை. முன்னர் வெங்காயம் விளைவித்துக் கைநட்டம் போன விவசாயிகள் பலர். அதேபோல மரக்கறிச் செய்கையிலும் பலர் நட்டம் அடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் இப்போது கணிசமாகக் கிடைக்கின்றன. ஆனால் விலைகள்தான் யானை விலைகள், குதிரை விலைகள். கொழும்பிலிருந்து பொருள்களைத் தருவிக்கவும், கப்பலில் இடம்பிடிக்கவும் உள்ளூர் வர்த்தகர்கள் முண்டி அடிக்கிறார்கள். அதில் லாபம் அதிகம் என்பதனாலா?

ஆனால் குடாநாட்டின் விளைபொருள்களைகொழும்புக்கு அனுப்பி அங்கிருந்து பணத்தைப் பெற்று இப்பிரதேச மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவ நினைப்பார் எவருமில்லை. அரசாங்கம் இது விடயத்தில் உரியவாறு அக்கறை காட்டவில்லை; தனியார்துறை இது குறித்துச் சிந்திப்பதாகவும் இல்லை.

குடாநாட்டு மக்களின் பணம் வெளியேபெருமளவில் போகிறது. ஆனால் வெளியிலிருந்து அவர்களுக்குப் பணம் வருவதில்லை. வர்த்தகச்சமச்சீரின்மை நிலவுகிறது.

இப்போது அரசாங்கம் தனக்குரிய வரிகளை இங்கு தாராளமாக அறவிடுகிறது. வெளி மாவட்டப் பொருள்களுக்கும் குடாநாட்டு மக்கள் பணத்தை இறைக்கிறார்கள். இரண்டு வழிகளாலும் குடாநாட்டு மக்களின் பணம் கரைகிறது. ஆனால் வெளியிலிருந்து இங்கு பணப் பரிவர்த்தனை.

வங்கிகளிலும் இதே ''விளையாட்டு''த் தான்! புதிது புதிதாக வசூலிப்புத் திட்டங்களைத் தொடக்கி, குடாநாட்டு மக்களிடம் இருந்து வைப்புகள், சேமிப்புகள் என்ற பெயர்களில் பணம் சுளை சுளையாகப் பெறப்படுகிறது.

ஆனால் விவசாயிக்கோ, மீனவருக்கோ, கைத்தொழிலாளருக்கோ, சுய வேலை வாய்ப்புக்கோ கடன் ஏதாவது வழங்கப்படுகிறதா? இப்பகுதி மக்களின் பணம் அவர்களுக்குப் பயன்படவில்லை; தென்னிலங்கைக்குக் கட்டுக் கட்டாகச் செல்கிறது. இது ஒரு வகைச் சுரண்டலே!

குடாநாட்டு மக்களுக்கு அது செய்கிறோம், இது செய்கிறோம் என்று சொல்லிக் காட்டுவதால் இப்பிரதேசத்தில் பொருளாதாரம் வளராது. திட்டமிட்ட வகையிலான, உருப்படியான செயற்பாடுகளே தேவை. பொருளாதார, வர்த்தக, நிதிச்சுற்று, சந்தைப்படுத்தல் துறைகளில் உள்ள கோணல்கள் நிமிர்த்தப்பட வேண்டும். எப்போது நிமிரும்?

# புதிய அரசமைப்பு சரத்துக்களுக்கு முழுமையாக ஆதரவு இல்லை

## காமினி அத்துக்கோரள தெரிவிப்பு

புதிய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற உள்ள சரத்துக்களில் 18 சரத்துக்களை நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் அண்மையில் வெளியிட்டார். இவற்றை சகல கட்சிகளும் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது தவறு ஐ. தே. க. எல்லாச் சரத்துக்களையும் ஆதரிக்கவில்லை.

இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோரள தெரிவித்தார்.

அரசமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முழு அங்கீகாரத்துடன் அது தொடர்பான விவரங்களை வெளியிட்டிருப்பதாக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறி உள்ளார்.

ஆனால் தெரிவுக் குழுவில் அரசின் யோசனைகள் தொடர்பாக ஆராயப்பட்டு சில விடயங்களுக்கு மட்டுமே முடிவு காணப்பட்டது.

முடிவு காணப்படாத பல விடயங்கள் இன்னமும் உள்ளன.

இப்படி அவர் மேலும்தெரிவித்தார். [இ-5]

## நேற்றும் 3 வள்ளங்களில் அகதிகள் குருநகர் வந்து சேர்ந்தனர்

குருநகர், மார்ச் 30

வன்னியிலிருந்து நேற்றுக் காலை குடாக்கடலினூடாக மூன்று வள்ளங்களில் பாஷையூரைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் குருநகர் இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் குருநகர் சீநோர் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

[இ-51-15]

## தந்தை செல்வா நினைவாக பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழர் தந்தை மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகத்தின் நூற்றாண்டு ஆரம்ப நாளான நாளை திங்கட்கிழமை காலை, மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் பிரார்த்தனை வைபவம் நடைபெறவுள்ளது.

நாளை காலை ஏழுமணிக்கு விசேட அபிஷேகம் பூசைகள் நடைபெற்று ஒன்பது மணிக்குப் பிரார்த்தனை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடைபெறும்.

தந்தை செல்வா பிரதிநிதித்துவம் செய்த காங்கேசன்துறை தொகுதி உட்பட்ட வலிகாமம் வடக்கு மக்கள் சார்பாக தந்தை செல்வா நினைவுக்குழு இவ் வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளது. (அ)

ஈழத்து ஆலயங்களுக்குச் செல்ல வாய்ப்பில்லாத நிலை நீங்க வேண்டும்

# இந்தியத் திருத்தலங்களைத் தரிசிப்பதன் மூலம் பிறப்பெடுத்த நற்பயன் பக்தர்களுக்குக் கிடைக்கும்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இந்தியாவுக்குச் சென்று திருத்தல யாத்திரை செய்தார்.

இந்தத் திருத்தல யாத்திரையின்போது தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள், உணர்வுகள் குறித்து சுவாமிகள் வெளியிட்ட தகவல்களின் தொகுப்பு இது.

சந்திப்பு:
இராசையா ஸ்ரீதரன்

★ சுவாமிகளே! நீங்கள் இந்திய யாத்திரையை மேற்கொண்டதற்கான காரணம் என்ன?

சிதம்பரத்தில் திருமுறை மாநாடுநடை பெறுவதாகவும் அதில் கலந்து கொள்ளுமாறும் எனக்கு மதுரை ஆதீனம் மூலமாக அங்கிருந்து அழைப்பு வந்ததன் காரணமாக இந்த யாத்திரையை மேற்கொண்டேன். இது இறைவனால் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். ஆனால், திருமுறை மாநாடு திட்டமிட்டவாறு நடக்கவில்லை. ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

★ நீங்கள் இந்த யாத்திரையை மேற்கொண்டு திரும்பிய பின்னர் நாட்டு மக்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

''அவனருளாலே அவன் றாள் வணங்கி'' என்ற மணிவாசகர்வாக்குக்கமைய இறைவன்திருவருள் கைகூடியமையால் எனக்கு இந்தப் பாக்கியம்கிடைத்தது. என்னுடைய ஆத்மீக பலத்தைக் கூட்டுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகஅமைந்தது. வாழ்வில் யாருக்குமே கிட்டாத பெரும்பேறுகள் எனக்குக் கிடைத்தன.

இதன் மூலம் நான் நாட்டு மக்களுக்குக் கூற விரும்புவது யாதெனில், ''அவனன்றி ஓரணுவும் அசையாது.'' இறைவனுடைய பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டால் நம்மை யாரும் ஒன்றும்செய்ய முடியாது. மார்க்கண்டேயர் இறுதிவரையில் இறைவனையே முழுக்க முழுக்க நம்பியபடியால் இயமனைக் காலால் உதைத்து அவரைக் காப்பாற்றினார் ஈசன். அதுபோலவே, நாமும் எவ்வித இடர், துன்பம், துயரம் வந்தாலும் முற்றாக நம்மை ஆண்டவனிடம் ஒப்படைத்துவிட்டால் எல்லாவற்றையும் அவன் பார்த்துக் கொள்வான், மலையென வரும் துன்பம் கடுகளவாய் மாறிவிடும். இஃது நான் கண்ட அனுபவ உண்மை. இந்திய மண்ணில் இதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். ஆகவே தமிழ் மக்கள் யாவரும் தத்தம் பிரச்சினை தீர்வதற்கு ஆண்டவனிடமே முறையிட வேண்டும். அப்போது தான் நிம்மதி பிறக்கும்; அமைதி கிடைக்கும்; ஆனந்தம் உற்பவிக்கும்.

★ இந்தியாவில் நீங்கள் தரிசித்த திருத்தலங்கள் பற்றிக் கூற முடியுமா?

கந்தனின் ஆறுபடை வீடுகளும் ஆனந்தமாய்த் தரிசனம் செய்தேன். திருவானைக்கா முதலாய பஞ்ச பூத திருத்தலங்களும் பார்த்தேன். மருதமலை ஆண்டவர் என் கண்களுக்குள் அப்படியே இன்னும் காட்சி தந்து கொண்டே இருக்கின்றார். மற்றும் ஸப்த விடங்கள், இமயமலை ஹரித்துவாரம், காசி, திருக்குற்றாலம், திருப்பதி, இராமேஸ்வரம், தஞ்சைப் பெரிய கோயில், சிதம்பரம், சீர்காழி, மதுரை மீனாட்சி காஞ்சிபுரம், சமயபுரம், ஸ்ரீரங்கம் இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். கங்கை, காவிரி, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, சரவணப்பொய்கை முதலாய புண்ணிய நதிகள் பலவற்றில் நீராடினேன். அதில் நீராடிய போது என் பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டு, என்னுடலானது இலேசாக இருந்ததை உணர்ந்தேன். என்னையறியாயாமல், ஓர் இன்னதென்று சொல்ல முடியாத முற்றிலும் புதிய ஓர் உணர்வு என்னை ஆட்கொண்டது. அதை அனுபவித்துத்தான் உணர முடியுமே தவிர வார்த்தைகளால் சொல்லி முடியாது. பரிபூரணானந்த உணர்வு அது.

★ இந்தத் திருத்தல யாத்திரையின் மூலம் நீங்கள் பெற்ற பயன் யாது?

நல்ல கேள்வி கேட்டீர்கள்! என் வாழ் நாளிலேயே மறக்க முடியாத பல அனுபவங்களைப் பெற்றேன். எனது குருநாதரின் ஆசியினால் எனக்கு நடந்த மதிப்பும் மரியாதையும் அவருக்கே உரியதாகுக என்று அர்ப்பணஞ் செய்து விட்டேன். இன்னும் சொல்லப்போனால் என்னுடைய ஆத்மார்த்தமான தியானத்தின் மூலம் எல்லையில்லா ஆனந்தம் பெற்றேன். புராணக் கதைகளில் காதால் கேட்டும், படித்தும் அறிந்தவற்றை நேரில் கண்ணால் பார்த்தபோது உள்ளம் பூரிப்படைந்தேன். ஞானசம்பந்தர் ஞானப்பால் குடித்த இடம், பொற்றாளம் பெற்ற இடம், மனுநீதி கண்ட சோழன் தேர்க்காலில் பிள்ளையை நெரித்த இடம் மற்றும் மதுரையில் சோமசுந்தரப் பெருமான் பிட்டுக்கு மண் சுமந்த இடம், நாயன்மார்கள் திருவருள் நலத்தினால் அற்புதங்கள் நிகழ்த்திய இடங்கள் என்று இன்னோரன்ன பலவற்றையும் கண்ணால் நேரில் பார்த்துப் பரவசமடைந்தேன். இப்படி அஃதுபற்றி சொல்லி முடியாது. நாள் முழுக்கப் பேசிக் கொண்டிருக்கலாம்.

## நல்லை ஆதீன முதல்வரின் இந்திய யாத்திரை அனுபவம்

இத்திருத்தலங்களை நேரில் தரிசித்தால் எவருக்கும் பக்தி பிறக்கும். பிறப்பின் நற்பயனாகவும் முடியும். புதுமையான அற்புத திருத்தலங்கள் அவை.

### கொழும்பில் கிளை

★ வேறு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

நான் இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்பிய போது 'சூடாமணி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகத்தைச் சந்தித்தேன். கொழும்பு வாழ் மக்கள் அவரூடாக ஒரு வேண்டுகோள் விடுத்தனர். அது என்னவென்றால், யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கிளை ஒன்றை கொழும்பிலும் நிறுவவேண்டும்; அதன் மூலம் சமயமறுமலர்ச்சிக்கு நாங்கள் உதவ முடியும் என்று.

நான் எதற்காக என்று கேட்டபோது, கொழும்பில் சைவ சமய நிறுவனங்கள் எதுவும் முறையாக இயங்காத படியால் நல்லை ஆதீன கிளை ஒன்று கட்டாயமாக நிறுவப்பட வேண்டும். அதன் மூலம் சமயபாட வகுப்புகள், சமய தீட்சை, பாலர்வகுப்புக்கள் மற்றும்பல வழிகளிலும் கொழும்பிலும் சைவத்தை வேரூன்றச் செய்வதற்கான ஆக்க முயற்சிகள் பலவற்றை செய்யலாம் என்றும் கூறினார். நான் அது பற்றி ஆலோசிப்பதாகக் கூறியுள்ளேன். சிந்தித்தே முடிவு செய்யவேண்டும். இறைவன் திருவுள்ளம் எப்படியோ?

★ ஈழநாட்டுத் திருத்தலங்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

அது மிகவும் கவலைக்குரிய விடயம். பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் ஏனைய பிரசித்திபெற்ற திருத்தலங்களும் மக்கள் வழிபாட்டுக்காக சுதந்திரமாகப் போய் வரக் கூடிய நிலை என்று வருமோ அன்றுதான் நிம்மதி கிடைக்கும். நாயன்மார்கள் பாடிச் சென்ற பாடல்கள் பொய்யாகக் கூடாதல்லவா? அவற்றைத் தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தால் மேலும் சிறப்பாக இருக்கும்.

★ அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

அதுதான் நான் ஏற்கனவே சொல்லி விட்டேனே! ஆத்மார்த்தமான பிரார்த்தனை மூலம் தான் வெற்றிகாண முடியும். இறைசக்தி ஒன்றின் மூலமே எதற்கும் தீர்வுகாண முடியும். நம்மில் எதுவுமே இல்லை. எல்லாம் அவன் செயல். இப்போது உங்களோடு உரையாடிக் கொண்டிருப்பதும் திருவருள் திறத்தினாலேயன்றி வேறொன்றுமல்ல.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே. இறைவன் ஆட்டுகிறான்; நாங்கள் ஆடுகின்றோம். பொம்மலாட்டக்காரர் பொம்மைகளை வைத்து விளையாட்டு வேடிக்கை காட்டும் போது கயிறு அறுந்து விட்டால் பொம்மை வீழ்ந்துவிடும். அதுவரையில் தான் எமது ஆட்டம்.

ஆகவே, இறைவனை முன்வைத்து எக்காரியத்தையும் செய்தால் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். நாத்திகம் பேசி நாத்தழும்பேறாது நம்மிற் பலர் ஆத்மீக சிந்தனைக்கு மாறி பசு வதையை விடுத்து இறை சிந்தனையுடன் வாழ முற்பட வேண்டும் என்பதே என் அவா. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிபுராவில் இருந்து திரும்பிய
# சிட்டாகொங் ஆதிவாசிகளுக்கு பங்களாதேஷில் வரவேற்பு

டாக்கா, மார்ச் 30

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் இருந்து தாய் நாட்டுக்குத் திரும்பிய ஆதிவாசிகளுக்கு பங்களாதேஷில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பங்களாதேஷ் நாட்டினரான ஆதிவாசிகளை அவர்களின் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் முதல் தொகுதியினர் நேற்று முன்தினம் திரிபுராவில் இருந்து அனுப்பி வைக்கப்பப்பட்டனர்.

இச்சம்பவம் இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய சகாப்தத்தை குறிப்பதாக இந்திய பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்,

சாந்திபாஹினி கெரில்லாக்களின் 24 வருட காலக் கிளர்ச்சியில் இருந்து தப்புவதற்காக சிட்டாகொங் மலைப் பிரதேசங்களில் இருந்து சுமார் 50 ஆயிரம் ஆதிவாசிகள் இந்தியாவுக்குள் தஞ்சமடைந்திருந்தனர்.

சிட்டாகொங் மலைப் பகுதியில் உள்ள 5 ஆயிரத்து 500 சதுர மைல் பிரதேசத்துக்கு 'சாந்திபாஹினி' சுயாட்சி கோரிப் போராடி வருகிறது.

(ஐ)

## ஒரு பெண் உட்பட..

(முதலாம் பக்கத் தொடர்)

- ★ செபமாலை செபரெத்தினம்—இமையாணன், உடுப்பிட்டி.
- ★ தங்கமணி கிருபாகரன் — மிருசுவில் வடக்கு.
- ★ சிவபாதம் சிவஞானம் — துன்னாலை, கரவெட்டி.
- ★ செல்லையா ஜெகதீஸ்வரன் — மீசாலை.
- ★ சிவகுருநாதன் அருட்செல்வம் — கரவெட்டி.
- ★ மாணிக்கம் சுப்பிரமணியம் — புலோலி வடக்கு, பருத்தித்துறை.
- ★ வல்லி செபகுமாரன்.
- ★ திருச்செல்வம் வெலஸ்றோஸ்.
- ★ செல்லத்தம்பி விஸ்வேஸ்வரன்.
- ★ ஐயாத்துரை துரைராசா.

இதேவேளை — சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் 7 பேர் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

[இ 5]

## வீரவில முகாமில்...

(முதலாம் பக்கத் தொடர்)

றும் —

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பேரில் இந்த இளைஞர்கள் அனைவருக்கும் தொழிற் பயிற்சியும் மேசன், தச்சு, தையல் பயிற்சியும் வழங்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு விடுதலை செய்யப்படும் 62 தமிழ் இளைஞர்களையும் யாழ்ப்பாணத்தில் அவர்களது உறவினர்களிடம் கையளிப்பதற்கும் ஏற்பாடாகி இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

(இ-5)


யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

**3ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கு**

31 - 03 - 97 இல் நடைபெறவுள்ள கலை வார இறுதி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதிநிதி
மூன்றாம் வருடம்

(46059)



## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நாகம்மா

காரைநகர் விளானை பிறப்பிடமாகவும், காரைநகர் பயிரிக்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகம்மா 29 - 3 - 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை காசுபதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அன்னமலர், குலேந்திரன், கனகேந்திரன், இந்திராதேவி. கனகசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலுப்பிள்ளை (சுந்தரலிங்கம்), இராஜேஸ்வரன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், வேணுகன், சுகந்தினி, சரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-3-97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் :
கனகசுந்தரம்
(மகன்)

தற்போதைய முகவரி:
பலாலி றோட்,
மடம் லேன்,
திருநெல்வேலி.

(46067)



**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**


# அடுத்த ஆண்டு ஜனவரி முதல் புதிய கல்வித் திட்டம் அமுல்

கொழும்பு, மார்ச் 30

எமது நாட்டுக்கு எந்த வகையிலும் பொருத்தமற்றது என்று கருதப்படும் இன்றைய கல்வித் திட்டங்கள் முற்றுமுழுதாக மாற்றி அமைக்கப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் புதிய கல்விக் கொள்கைகள் அமுலுக்கு வரும்.

இப்படி தேசிய கல்வி ஆணைக்குழுவின் துணைத் தலைவர் கே. டி. அருட்பிரகாசம் தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறற செயலமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஆண்டு ஆரம்பம் முதல் நாட்டின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் 300முதல் தரக் கல்லூரிகள் நிறுவப்படும். இவை அனைத்திலும் கொழும்பிலுள்ள முதல் தரக் கல்லூரிகளிலுள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

முதலாம் தரத்திலிருந்து எட்டாம் தரம்வரை கனிஷ்ட, இடைநிலை பாடசாலை என்றும்—

ஒன்பதாம் தரத்திலிருந்து பன்னிரண்டாம் தரம் வரை சிரேஷ்ட கல்லூரிகள் எனவும்—இரு பிரிவுகளாகவே இனிமேல் பாடசாலைகள் அனைத்தும் இயங்கும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் வழமை போல் நடைபெற்றுவரும்.

உருவாகப்போகும்முந்நூறு முதல்தரக் கல்லூரிகளும்சிறப்பாக இயங்கத் தொடங்கியதும் அந்தந்தப்பகுதி மாணவர்களுக்கு அந்த விசேட கல்லூரிகளில் அனுமதி கிடைக்கும். எனவே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகள் தானாகவே நின்றுவிடலாம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-5)

## வாதுவவில் வெங்காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களில் ஒன்றானவெங்காயம வாதுவ கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகிறது

சுமார் 25 லொறி வெங்காயத்தை இக்கப்பலில் ஏற்றும் பணி நேற்று நடைபெற்றது.

அதே சமயம் யாழ். நகரப் பகுதியில் தரமான வெங்காயம் கிலோ 40 ரூபாவாக நேற்று விற்கப்பட்டது.

(இ-15)

## கோண்டாவிலில் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 30

கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணி அளவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்ததாக இனந் தெரியாத இளைஞன் ஒருவரின் சடலம் யாழ்ப்பாணம் பொலீஸாரினால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காகவும் —

மரண விசாரணையின் நிமித்தமும் — ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

சடலத்தின் இடது பக்க மார்பிலும், வலது பக்க மேல் கையிலும் துப்பாக்கிச்சூட்டுக்கான காயங்கள் காணப் பட்டன.

(இ-15)

## பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்)

நாள்களில் பொருள்களை எடுத்துவர வசதி செய்யப்பட வேண்டும்

★ காங்கேசன்துறை, பருத்தித்துறை வரும் கப்பல்களில் இருந்து பொருள்களை உடன் இறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ அரிசி, பால்மா, மா ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மக்களுக்குக் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.

இத்தீர்மானங்களை ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மூலம் மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கடைகளில் பணிபுரியும் சிப்பந்திகள் பிரச்சினை பற்றியும் ஆராயப்பட்டது.

(இ-3)

## கப்பல் - விமான...

(முதலாம் பக்கத் தொடர்)

அதன்பின் அவர்களின் பதிவுகள் ரத்துச் செய்யப்படும் என்றும்—சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

பட்டியல் இலக்கம் 524 முதல் 559 வரையானவர்கள் எதிர்வரும் முதலாம்திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் பயணம் செய்ய வேண்டும் என்றும்—

அதன் பின் பயணம் செய்ய முடியாது என்றும்—அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை — விமானத்தில் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 293 வரை அனுமதிகிடைத்துள்ளதாகவும்—

சிவில் அலுவலகத்தில் தமது பயண திகதியை உறுதி செய்யுமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## ரூ. 45 லட்சம் நகை கொள்ளை

கொழும்பு, மார்ச் 30

கிரிபத்கொட நகரிலுள்ள நகைக்கடை ஒன்றுக்குள் கடந்த வியாழன் நண்பகல் துப்பாக்கி சகிதம் நுழைந்த நால்வர் அடங்கிய குழு ஒன்று கடைச் சிப்பந்திகளை அச்சுறுத்தி 45 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

(இ-10)

## எள்ளு, சணல் பயிர்ச் செய்கை

நவாலி, மார்ச் 30

நவாலி, கல்லுண்டாய், வழுக்கையாற்றுப் பகுதி வயல்களில் இம் முறை எள்ளும் சணலும் தாராளமாகப் பயிரிடப் பட்டுள்ளன.

இவற்றை சில கட்டாக்காலி மாடுகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஐ - 100)

## 22 அதிரடிப்படையி..

(முதலாம் பக்கத் தொடர்)

காததாலும் வழக்கு இம் மாதம் 13ஆம் திகதி எடுக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது

அன்றைய தினம் மேலதிக அறிக்கை சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் நீதிவான் தெரிவித்திருந்தார்.

தற்போது வழக்கு பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

தலைநகரில் கைதாகி காணாமல்போன 21 தமிழர்களே வாவிகளில் சடலமாகக் கிடந்தவர்கள் என்று கூறப் பட்டது.

(இ-5)

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்)

யப்படல் வேண்டும் என்றும் —

ஒரே கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தலைவர், பிரதித்தலைவா பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படக் கூடாது என்றும் — கட்சி செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கட்சி பொதுச் செயலாளர்கள் கூட்டத்தை அடுத்து சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்தித்து நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அடுத்த வாரத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி செயற்குழு கூடி இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

(இ-5)

## சர்வதேச கிரிக்கெட்பேரவை புதிய தலைவர்

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அடுத்த தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஜக்மோகன் டால்மியா தெரிவாகியுள்ளார்.

இந்தப்பதவிக்குரிய பெரும்பான்மை வாக்குகளை இவர் கடந்த ஜூலை மாதத்திலேயே பெற்றிருந்த போதும் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற சில நாடுகள் இவரது தலைமைத்துவத்துக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தன.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தற்போதைய தலைவரான மேற்கிந்தியாவைச் சேர்ந்த கிளைட் வொல்கோட்டிஸின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூன் மாதம் முடிவடைந்ததும் இவர் புதிய தலைவராகப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இருவருக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்)

நடந்து கொண்டவிதம் குறித்தும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகிறார்.

அமைச்சர் தொண்டமானுக்கு எதிராகவும் ஆளும் கட்சியில் அதிருப்தி நிலவுகிறது. தொண்டமான் அமைச்சராக இருந்தும், நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மலையக மக்களின் ஆதரவு அரசுக்குக் கிடைக்கவில்லை என்ற கருத்து ஆளும் கட்சி வட்டாரத்தில் நிலவுகிறது. அதே வேளை தொண்டமானுக்கு எதிரான தொழிற் சங்கங்கள் மற்றும் சக்திகள் தொண்டமானை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

சிறிமானி அத்துலத் முதலியை அமைச்சரவையிலிருந்து நீக்கினால் அரசுக்குப் புதிய பிரச்சினைகள் உருவாகும். தற்போது தென் மாகாண சபையை பொ. ஐ. முன்னணியே நிர்வகித்து வருகிறது.

சிறிமானி அத்துலத் முதலியின் அமைச்சர் பதவி பறிக்கப்பட்டால் தென்மாகாண சபையில் ஆளும் பொ. ஐ. முன்னணிக்கு வழங்கும் ஆதரவை அவரது கட்சி வாபஸ் வாங்கக்கூடும். அப்போது தென்மாகாண சபையின் நிர்வாகம் ஐ. தே. கட்சியிடம் செல்லும்.

எனவே சிறிமானி அத்துலத் முதலியை அமைச்சரவையில் இருந்து விலக்குவது அரசுக்குப் பாதகமான விளைவுகளைக் கொண்டு வரும் என்று அரசாங்கத்தில் உள்ள ஒரு பிரிவினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனினும் அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறும் என்று அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

( அ-10)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-03-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org